The Registrar of Books,
Madras 6.

325

325
U. 51.

பதிவு எண் — M. 5720

வெள்ளிக் கிழமையில்

குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை–3	குருகுலம், மாம்பாக்கம்; கர, ஆவணி; 31—8—51.	தளிர்–46

"குணநலம் சான்றோர் நலனே; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

'கடனென்ப நல்லவை யெல்லாம்; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - NOV 1951
MADRAS

வாழ்த்து

முல்லைக் கொடியே! முல்லைக் கொடியே!
முழுமதி யொடுகடல் முத்[illegible]யாக்கும்
விழுமிய வண்ணம் விளங்கு மலர்க்கொடி!

அன்பொடு நாணே, அருங்கண் ணோட்டம்,
இன்னொப் புரவே, ஈடில் வாய்மை
இவ்வைந் தும்மே எதமில் சால்பின்
செவ்விய தூணெனச் செப்புந் தமிழ்மறை;
அன்பெனல் பிறர்மேல் ஆர்வங் கொள்ளல்
நின்னன் பறிதுநீ நெடுமர மணைதலால்,
நெகிழ்ந்து வளர்ந்த நின்னுடல் காட்டும்
மிகுநா ணுடைய மெல்லியல் நீயென,
காயுங் கதிரால் கருகுவ கண்டு
நீயுள் ளுருகல் நின்கண் ணோட்டம்,
கைம்மா றேலாக் கடிமணங் கமழ்தல்
எம்மாண் பெனிலஃ தின்னொப் புரவே,
வாய்மை அகத்தின் தூய்மையே நின்னகத்
தூய்மை தோன்றநின் தூவெண் மலரால்,
இவ்வகை சால்பின் இயல்புக ளமைந்த
செவ்வியை யாதலின் சிறக்க நீயே!

சான்றாண் மையித ழாயினை சான்றோய்!
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோன்,
குருகுல மமைத்த குரவன், உலகிற்
கொருகுரு வாகிய வள்ளுவன் உரையை
உலகெலாம் பரப்ப உளங்கொண் டுழைக்கும்
அலகில் புலமையன், அறக்கடல் குறித்தோன்,
இளவழ கன்னெனு மெழில்பே ராளன்
விளங்க ஆசா னாகநீ, விழுமிய
பொன்னுரை கொண்டு புகழொடு சால்பின்
இன்மண மெங்குங் கமழ, மன்பதை
இன்னல் தவிர்ந்து நன்மை பெருகிப்
பன்னருஞ் சிறப்பொடு பலகால் வாழப்,
பாரினில் நீயும் படர்ந்து வாழியே!

மு. குப்புசாமி,
(தொல்காப்பியர் நிலயம், அரக்கோணம்.)

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4.

தனித் தாள்—அணா 1

‘ஒன்றே......கானலது பழியே’

‘நற்றிணை’ அழகு

[R. G. பிள்ளை B. A.]

கடற்கரைச் சோலைக்குக் கானல் என்று பெயர். அது, கழியை அடுத்திருப்பதால் கழிக்கானல் என்றும், அதில் புன்னைமரங்கள் அடர்ந்திருப்பதால் புன்னையங் கானல் என்றும் தமிழ் நூல்களில் பேசப் படுகின்றது. கானலது பழி ஒன்றேயாயின், அதைக் குறித்த மற்றவை யெலாம் அதற்குப் புகழாதல் வேண்டும். நெய்தல் நிலப் பெருமையை ஒரு தமிழ் மகள் விரித்துரைக்கின்றாள். காரணம் அடியிற் காட்டுவோம்.

கடற்கரையில் ஒரு மூதூர். களவொழுக்கத்தில் ஈடுபட்ட நெய்தல் நிலத் தலைமகன், தலை மகளை நாடித் தேரூர்ந்து, கடற்கரைச் சோலைக்கு வந்து மீள்வான். அதையறிந்த ஊரார் அலர் தூற்றக் கிளம்பினர். ஊரார் பழிச்சொல் தலை மகன் காதில் விழவே, அச் சோலைக்கு வருவதை அவன் நிறுத்திக் கொண்டான். தலைவனைக் காணாமையால் தலைவி வருந்துகின்றாள். தோழி அவளுக்கு ஆறுதல் கூறுகின்றாள். கானலில் தலை மகன் வரவின்மை ஒன்றொழியப் பிறவாற்றால் தம் ஊர் மிகச் சிறப்புடையதென்று கூறி, தோழி தலை மகளைத் தேற்றுகின்றாள்.

உணவுற்பத்தி இல்லாத நாடு வெகு விரைவில் கேடுறும் என்று ‘முல்லைக் கொடி’யின் சென்ற வார இதழில் குறித்தோம். மழையின்றி மாநிலத்தார் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியாது. தம்மூரில் மழை பெயினும், பெய்யா தொழியினும், உணவுக்குக் குறைவில்லை; ஆகவே தம் மூர் அழியாச் சிறப்பினை உடையதென்கின்றாள் தோழி. அவள் கூற்றை, உலோச்சனார் பாடிய பின்வரும் நற்றிணைச் செய்யுள் மூலம் சிறிது காண்போம்.

“பெயினே, விடுமா னுழையினம் வெறுப்பத்தோன்றி
யிருங்கதிர் நெல்லின் யாணரஃதே
வறப்பின், மாநீர் முண்டகக் தா அய்ச் சேறுபுலர்ந்
திருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு விளையு
மழியா மரபினம் மூதூர் நன்றே
கொழுமீன் சுடுபுகை மறுகினுண் மயங்கிச்
சிறுவீ ஞாழற் றுறையுமா ரினிதே
யொன்றே தோழிநங் கானலது பழியே
கருங்கோட்டுப் புன்னை மலரிற்றா தருந்தி
யிருங்களிப் பிரசமூதவவர்
நெடுந்தே ரின்னொலி கேட்டலோ வரிதே.”

மழை நிரம்பப் பெய்து, நெற்பயிர் செழித்தோங்குகையில், விலங்கினங்கள் வயல்களிற் புகுந்து நெற் கதிர்களைத் தின்றழிக்கும், பூச்சிகளாலும், பயிர்கள் அழிவதுண்டு. காட்டில் தன் னிச்சையாய்த் திரிகின்ற மானினங்கள், மழை பெய்தவுடன், கூட்டங் கூட்டமாக நாட்டிற் புகுந்து நெற் கதிர்களை மிகுதியாகத் தின்றாலும், நெல்லின் புது வருவாய் தம மூரில் குறைவதில்லை என்கின்றாள் தோழி. தலைமகனும் தலைமகளும் கானலில் கூடுவதைப் பற்றி ஊரார் எத்துணைப்பழி கூறினும், அவ்விருவர் தங் காதல் பொங்குகின்றதேயொழிய மங்குவதில்லை யென்னும் உட்கோளைத் தோழியின் கூற்றில் நாம் காண்கின்றோம்.

வானம் வறப்பினும், நெய்தல் நிலத்தில் வேறு வருவாயுண்டு. கழிச்சேற்றில் வெள்ளுப்பு விளைகின்றது. நெய்தல் நில மக்கள், தாம் பெற்ற உப்பைப் பிற வூர்களில் விற்றுத் தமக்கு வேண்டிய உணவுப் பண்டங்களைக் கொள்வார்கள். வெப்ப மிகுதியால் கழியிலுள்ள நீரும் வறண்டு விடும். முள்ளிச் செடியின் மலர்கள் கழி நீரில் உதிர்ந்து, பரந்து, அந்நீரைச் சேறாக்கும். அச்சேறு நன்றாகக் காய்ந்த விடமெல்லாம் வெள்ளுப்புப் பூக்கும். உப்பு இயற்கையாய் விளையுந்தன்மை இது. உப்பின் நிறம் வெண்மை யாகையால் வெள்ளுப்பு என்றது மிகையெனத் தோன்றும். உப்பு விளைகின்ற இடமாகிய கழியின் கருமை நிறத்தை வேறுபடுத்திக் காட்ட உப்பை ஆசிரியர் வெள்ளுப்பு என்றார். ‘இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு விளையும்’ என்றது இவ் வேறுபாட்டைக் காட்டுகின்றது.

நெல்லும், உப்பும், நிலத்தில் விளைகின்ற பொருள்கள். நெய்தல் நிலத்தில் மழை பெய்தால் நெல் விளையும்; மழையில்லாவிட்டால் உப்பு விளையும். அந்நிலத்திற்கு மற்றொரு சிறப்பும் உண்டு. கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல் நில மாதலையான்,

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

நஞ்சன்கூடு பல்பொடி.
பாக்டெரியாரின்
நம்பிக்கை பெற்ற ஆயுர்வேத உதவிகள்

காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் பேதியாக மாத்திரை
சிசுராக் குழந்தை டானிக்
பிமலெக்ஸ் டானிக்
யூடினல் கர்பிணிகளுக்கு
டோனடெல் பிரஸவமானபின் டானிக்
ஹிஸ்மெனோ டானிக்

பிரதமென்ஸ் சூதக கோளாருகளுக்கு
யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

பெரிய புராணம்

திருக்கூட்டச் சிறப்பு :

திருவாரூர்த் திருத்தளி மலர் வடிவமானது. அதனால் அதனைப் 'பூங்கோயில்' (கமலாலயம்) என்று வழங்குவதுண்டு. பெரிய கோயில்களில் திருவாரூர்த் திருத்தளியும் ஒன்று. புற்றிடங்கொண்டு கடவுள் அங்கே விளங்குகின்றார். மிகவும் பழைமையான கோயில்!

அங்கே திருக்கோயிலின் முன் வாயிலில் அடியார் திருக்கூட்டம் தங்கி உறையும் திருக்காவணம் (ஆசிரம இருக்கை) உண்டு. 'தேவாசிரியன்' என்று அந்த மண்டபத்துக்குப் பெயர். விண்ணில் உறையும் தேவர் பலரும் அடிக்கடி அங்கே வந்து இடைவிடாது தங்கிப் பயன் பெறுவர். ஞான உருவினரான அடியார், தேவர்கட்கும் குரவராய் இருந்து இங்கே மெய்ப்பொருள் அருளிச் செய்வர்.

இங்ஙனம், பிறர் இன்னல் தீர்க்கும் அடியார் திருக்கூட்டத்தின் அருளிருக்கையாய்த் திகழ்கின்ற தேவாசிரிய மண்டபம், ஆயிரம் பாற்கடல் ஒருங்கு சேர்ந்து விளங்கினாற்போல் பொலிவு பெற்றிருக்கும். காரணம், கடலின் ஒளிபோல அடியார் திருமேனிமேல் பூசப்பெற்று ஒளிரும் திருநீற்றின் பேரொளியும், கடலின் தூய்மைபோல அவர்கள் தம் புலன்களை வெளிவிடாமல் நிறுத்திய தவத் தூய்மையும், கடலின் ஒலிபோல அவர்கள் போற்றி ஒலிக்கும் திருவைந்தெழுத்து ஒலியும் அங்கு ஒருங்கே விளங்குவதுதான்.

மேலும் அது, அனைத்துலகமும் ஒருங்கு சேர்ந்த சூழல் போலவுந் தோன்றும். ஏனென்றால், எல்லா உலகங்களுக்கும் முதல்வராகிய இறைவன் திருவடி பரவும் அடியார்களே எல்லா உலகங்களையும் ஆள்வதற்குரிய தலைவர் என்று தெளிந்து, எல்லா உலகத்தாரும் அவர்களை நாடி அம் மண்டபத்தை அடைகின்றார்கள்.

இறைவனால் விரும்பி ஆட்கொள்ளப் பெற்றவர்கள் இவ் வடியார்கள். அன்பினால் வாய்மையில் விளையாடி இயங்குஞ் சிந்தையுடையவர்கள்; ஏதேனும் கையினால் திருத்தொண்டு செய்யுங் கடமை யுடையவர்கள்; மேலும், அவர்கள் எண்ணிலாதவர்கள்!

மாசில்லாத் மேனிமேல் பூசுந் திருநீறுபோல உள்ளமும் புனிதமுடையவர்கள்; தமது அருள் ஒளியினால் உலகத்தின் எப் பக்கங்களுக்கும் ஞான விளக்கம் தந்தவர்கள்; நாவினால் அளந்து கூற முடியாத மிக்க பெருந்தன்மையில் அவர்கள் விளங்கியிருந்தார்கள்!

நிலம் நீர் தீ காற்று வானம் என்னும் ஐந்து முதற் பொருள்களும் நிலைகலங்கினாலும், திருவருட் சிந்தையிலிருந்து தாம் வழுவமாட்டார்கள்; காதலால் திருவருட் பெருமையையே ஓதும் உறுதிப்பாட்டின் வழியிலேயே நிலைபெற்றிருந்தார்கள், குணத்தில் பெருங்குன்றாக விளங்கிய இவர்கள்!

மேலும், நிலையழிதலும் நிலை யுயர்தலும் என்னும் இரு வேறுபாடுகளும் இல்லாத நிலைத்த அருட்டிரு வாய்ந்தவர்களாய் இவர்கள் விளங்கினார்கள்; காண்பது ஓடானாலும் பொன்னானாலும் சம உள்ளத்துடனே அவற்றை நோக்குவார்கள். முடிந்த அன்பில் இறைவனை வணங்குதல் மட்டும் செய்வார்களே யன்றி, அவன் திருவடிப் பேற்றையும் வேண்டுதலில்லாத பேராற்றல் நிலையில் விளங்கியிருந்தார்கள்.

மாலை, உருத்திராக்க மணிதான்; ஆடையும் கந்தைதான்; அவர்களுக்கு இருந்த பொறுப்பெல்லாம் இறைவன் பணி யல்லது வேறொன்றும் இல்லை; யாரிடத்தும் இரங்கிய அன்புடையவர்கள்; ஆனால், சிந்தையில் ஒரு குறைவும் இல்லாதவர்கள். ஆ! அவர்கள் வீரம் என் ஒரு ... விளம்புந் தரமாகுமோ!

இயன்ற ... வாய்ந்த திருக்கோல முடையவர்கள் அவர்கள்! இறைவனுக்கு ஒப்பற்ற தொண்டர்கள்! நீண்ட பழம் புகழுடையவர்கள்! இவர்கள் பெருநிலையை நான் போற்றுதலல்லது என்னென்று அறிந்து விளக்க முடியும்!

இச் சிறந்த தவத்தோர் திருக்கூட்டத்தை நம் ஆசிரியர் ஆலால சுந்தரர் தமது அழகிய திருத்தொண்டத் தொகையால் போற்றி யிருக்கின்றார். அவர் வந்து பாடிய வகையை இனிப் பேசலாம்.

இங்ஙனம் சேக்கிழார் பெருமான் அடியார்களின் மாண்பைத் திருக்கூட்டச் சிறப்பில் அருளுடன் விளக்கியிருக்கின்றார்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை	கர, ஆவணி,	தளிர்
3	31-8-51 வெள்ளி	46

'கா'வைக் காப்போம்

சென்ற சில நாட்களுக்கு முன் கண்ட உயர்ந் தடர்ந்த புளியமரத் தோப்பினைக் காண முடியாமற் போன போது, ஒரு திகைப்புண்டானது. அடர்ந்த இடம் பாழானால் வெறிச் சென்று தோன்றுவது யார்க்கும் இயல்புதானே!

உலக இயற்கையே நிலையாமைதான் என்று பெரியோர் கூறி இருப்பினும் இவ்வாழ்வைக் காண்பவர் எவரும் வருந்தாமல் இரார். ஏனெனின், அவர்கள் கருதியது இயற்கை அழிவினை.

இதுவோ செயற்கையானதும் கொடியதும் தடுக்கப்பட வேண்டுவதுமாகும். இவ் வழிவுக்குக் காரணம், அத் தோப்பினை உடையவர், பொருளை விரும்பி வெட்டிச் சாய்த்துக் கரி யாக்கியதே யாம்.

இரண்டாம் உலகப்போர் நடந்தபோது உந்து வண்டிகளுக்கு வேண்டிய அளவு மண்ணெண்ணெய்(**Petrol**) கிடைப்பது அரிதாயிற்று. அதனால், பல வண்டிகளைக் கரி கொண்டு ஓட்டி வந்தனர். கரி மிகுதியாகத் தேவைப்பட்டது. பல ஆயிரக் கணக்கான புளிய மரங்கள் வேக வைக்கப்பட்டன சிறப்பாகச் சித்தூர் மாவட்டத்தில் இதனையே தொழிலாகக் கொண்டு பலர் பலப்பல மரங்களை வெட்டிச் சூளை இட்டனர்.

இந்த அழிவுச் செயல், போர் நின்று ஐந்தாண்டுகளாயினும் நின்ற பாடில்லை. இதனை உடனடியாக அறவே நிறுத்துவது மிகவும் இன்றியமையாதது.

பல் ஆண்டுகளாக வளர்ந்தும், கிளைத்தும், நீண்டும், பருத்தும் உள்ள மரங்களை மக்கள் கூட்டங் கூட்டமாக ஒரு புறம் அழித்துவர, மற்றொரு புறம் ஆட்சியினர் மழை தவறிய இக் காலத்தில் சில இடங்களில், சிறு சிறு கிளைகளை, மறு முறை நீர் ஊற்ற வசதிகள் இல்லாமலே பெரும் பொருள் செலவிட்டும் விழாக்களை நடத்தியும் நட்டு வருகின்றனர். இந் நிலையில் மரங்களாலாய பயனை எவ்வாறு எதிர் பார்க்க முடியும்? நடுகின்ற மரங்களைச் செழித்து வளரச் செய்வதோடு, அழிவு வேலையைத் தடுக்க வேண்டுவதும் முதன்மையாகும்.

ரஷ்ய நாட்டின் சிற்றூர் ஒன்றில், ஆட்சித் தலைவர் வருவதை முன்னிட்டு அவரைச் சிறப்புற வரவேற்க விரும்பிய ஒருவன், ஊர்ப்புறத்திருந்த ஒரு மரத்தை வெட்டிப் பெரிய பந்தர் அமைத்தான்.

அம்மரத்தை முன்பு ஒரு முறை கண்டிருந்த அத்தலைவர் அன்று காணப்படாததன் காரணத்தைக் கேட்டறிந்து வெட்டினவற்கு ஒறுப்புத் தரும்படி பஞ்சாயத்திற்கு ஆணை இட்டார். அதன்படியே அம்மரத்தை வெட்டினவனுக்குப் பஞ்சாயத்து, சிறை ஒறுப்புக் கொடுத்தது.

இந்நிகழ்ச்சி, மரங்களை எவ்வாறு காத்து வருகின்றனரென்பதைக் காட்டுகின்றது, அந்த மரம் வெட்டப்பட்டுத் தலைவர் வரவேற்புக்குப் பயன் பட்டதைவிட, வாழ்ந்து அவ்வூரார் பலர்க்கும் செய்யக் கூடிய உதவியே பெரிதாகக் கருதப்பட்டது. அப் பெரும் பயனுக்குத் தடையாய் இருந்தவன் கொலைக் குற்றவாளி போல் ஆனான் போலும்! தலைவர் வரவேற்பு விழாவிற்கு வெட்டப்பட்டதென்பதும் பொருட்படுத்தப்படவில்லை. என்னே அவர்கள் மரத்தினிடம் வைத்த அன்பு!

அவர்கள் ஆட்சியும் காடுகளை நன்கு காக்கின்றது. அதாவது காடுகளில் தீயால் அழிவு நிகழாதவாறும், தீப்பற்றுமானால் உடனே அணைக்கவும் அவ்வப்போது வானூர்தியிற் சென்று அவர்கள் பார்வை இடுகின்றனர்,

தமிழ்நாட்டு முன்னோரும் மரங்களைத் தக்கவாறே மதித்தனர். மரம் பெரும் பயன் தருவதால் அதில் விளங்கும் கடவுட் பண்பை அதன் வழியாய் வழிபட்டது ஒரு புற மிருக்க, பச்சை மரத்தை வெட்டுவதைக் கொடிய செயலாகவும் எண்ணி வந்தனர்.

மரங்களால் நாம் உயிர் வாழ்கிறோம், அவை நமக்கு உண்டி, உடை உறையுள் ஆகியவற்றைத் தந்து காக்கின்றன என்னும் உண்மையை நன்கு உணர்ந்து, அவற்றிற்கு நன்றி செலுத்த எண்ணினர். எனவே, தோப்புகளைக் 'காப்பவை' என்னும் பொருள்பட நன்றியறிதலோடு வாயாரக் 'கா'........என்று அழைத்து இன்புற்றனர்.

நாம் எதையும் எண்ணிப் பாராமல் ஐந்தாண்டுகளாகப் பேரழிவினைச் செய்து விட்

தூத்துக்குடி
சைவசித்தாந்த சபை

அன்புமிக்க ஐயா,

வணக்கம்; நலன்; நலன் அறியும் அவாவுடையேன். அடியேனது 79 ஆம் அகவைப் பிறப்பு நாளையும் "நெஞ்சுவிடு தூது" பாட நிறைவையும் முன்னிட்டு 5-8-51ல் நமது சைவ சித்தாந்த சபையினரால் ஒரு பேரவை கூட்டப் பெற்றது. அப்பேரவைக்குச் சாத்தூர் வழக்கறிஞர், சித்தாந்த சிரோன்மணி திரு. T. S. கந்தசாமி முதலியார் M. A. அவர்கள் தலைமை தாங்கினார்கள். அப்பேரவையில் தங்கள் சித்தாந்த ஆராய்ச்சித்திறனையும், தொண்டையும் பாராட்டித் தங்கட்கு "சித்தாந்தச் செஞ்ஞாயிறு" என்னும் பட்டம் வழங்கப் பெற்றதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தாங்கள் அப்பட்டத்தை அன்புடன் ஏற்று இனி தங்கள் பெயருடன் புனைந்து வழங்கிவர வேண்டிக் கொள்ளுகிறேன். விரைவில் மேற்படி பட்டம் அளிப்புச் சான்று இதழ் அனுப்பப் பெறும்.

அடிக்கடி தங்கள் தலைனத் தெரிவித்துக் கொர்ண்டிருக்க வேண்டிக் கொள்ளுகிறேன். நான் முதுமையினால் வெளியூர்கட்குச் செல்ல இயலாதவனாயிருக்கின்றேன். ஆதலின் தங்களைச் சந்திக்கும் பேறு கிட்டவில்லை.

அன்பன்.

ந. சிவகுருநாதன்.

23-8-51.

குறிப்பு:—தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை, தமிழகத்தின் மிகப் பழமையான சபைகளுள் ஒன்று. சித்தாந்தப் பேராசிரியாகிய சைவத் திரு. ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள் அச் சபையின் வாயிலாகச் செய்து வரும் தொண்டுகளும் பலப் பல. நினைவுடன் அன்பு கூர்ந்து பட்டம் வழங்கி எழுதியுள்ள மேற்குறித்த கடிதம், நாளும் போற்றுதற்குரியது. பெருந்தக்கார்க்கே கிடைத்தற்குரிய அரிய பட்டப் பெயர், மிக எளிய தமக்குக் கிடைத்தது, பேரன்பின் பாலது என்று உள்ளுருகி, ஆசிரியர் தமது அகமார்ந்த நன்றியைப் பணிவுடன் செலுத்திக் கொள்கின்றனர்.

அரசினர் போன்றார் செய்தற்குரியதை, இத்தகைய மேதக்கோர் பேரவையும் மேற்கொண்டு செய்து வருதல், கடமைக்கு எடுத்துக் காட்டாகும், இது, பெரிது பாராட்டுதற்குரியது.

டோம். இவ் வழிவு மேலுந் தொடர்ந்து நடக்குமானால் இந்நாடு ஒரு பாலைவனமாகவும் மாறக்கூடும். இப்பொழுதே பல ஊர்கள் இவ்வாறு காணப்படுகின்றன. உடனே இக்கொலைச் செயலை நிறுத்த வேண்டும்.

மரங்களை வெட்டக் கூடாதென்பதனால் கரி இன்றி விசை வண்டிகள் நின்று விடுமானாலும் குறை இல்லை. வேறு வண்டிகளைக் கொண்டு ஊர்களுக்குச் செல்லலாம். மரங்களை மாய்த்து விட்டால் பின் நம்மைக் காப்பவை?

ஆராய்ந்து பார்த்தால் வண்டிகளுக்குத் தேவையான மண்ணெண்ணெய் கிடைக்காமற் போகவில்லை என்றும், மண்ணெண்ணெயைவிடக் கரி விலை குறைவென்ற காரணம் இதற்கு அடிப்படையாய் இருக்கலாம் என்றும் தெரிகிறது.

கரியால் ஒரு சிலர்க்கு வரக்கூடிய சிறு ஊதியம் நாட்டின் பேரழிவுக்குக் காரணமாகின்றதென்பதை மக்கள் உணர வேண்டும்.

ஆட்சியும் இதைக் கருத்திற் கொண்டு தோப்புகள் நாட்டில் நிலைபேறுற்று விளங்குவதற்கும் ஆவன செய்தல் இன்றியமையாதது.

நம்மைக் காக்கும் காவை நாமும் காப்போமாக!

(மெய்கண்டான்)

முருகவேள் திருமுறைகள்

முதல் பகுதி வெளிவந்தபின், மேலும் பெயர்ப் பதிவுகள் சேர்ந்து வருகின்றன. குறித்த அளவு சேர்ந்தபின், வெளியீடுகள் தொடர்ந்து வெளிவரும்.

இத் திருமுறைகள் பகுதி பகுதியாக வெளிவருதலை விட, தொகுதி தொகுதியாக அட்டைக் கட்டுச் செய்து வெளிவருதல் கையாளுதற்குத் தகுதியாயிருக்கும் என்றும், அஞ்சலில் வருவிப்பதற்கும் செலவு குறையும் என்றும் சிலர் கருத்து அறிவிக்கின்றனர். அவ்வாறே செய்ய வெளியிடுவோர் இசைந்துள்ளனர்.

நான்கு பகுதிகள் சேர்ந்த தொகுதி ஒன்று (400 பக்கங்கள்) ரூபா 5-0-0 விலையாகும். வாங்குவோர்க்குக் கட்டுச் செய்யும் தனிச் செலவு அப்போது இல்லை. நான்கு திங்களில் நடைபெறும் பணி, இரண்டு திங்களில் நிறைவேறும். பல வெளியீடுகள் இங்ஙனம் தொடர்ந்து விரைவில் வெளிவருதற்கும் வாய்ப்பாயிருக்கும்.

ஆதலால், முருகவேள் திருமுறை அன்பர்கள், தொகுதியாகவே இனிப்பெற்றுக்கொள்ளலாம். விரும்பும் அன்பர்கள் அதற்குரிய விலை ரூபா ஐந்தை முன்னால் அனுப்பி ஒவ்வொரு தொகுதியையும் பெற்றுக் கொள்வார்களாக!

வாங்குவோர் எண்ணிக்கை போதியது அமைந்தால் ஆவணித் திங்களிலேயே முதல் தொகுதியை வெளியிடலாகும்.

குறிப்பு:-முதல் பகுதியை வாங்கிக் கொண்டவர்கள், முதல் தொகுதியில் அடங்கும் ஏனை மூன்று பகுதிகளையும் தனித்தனியே பெற விரும்பினாலும் அவர்களுக்கு அவ்வாறே அனுப்பி வைக்கப்பெறும்.

—குருகுலத்தார்.

சீர்திருத்தக் காரர்களுக்கு

(ஆடலரசு)

இன்று நாடெங்கும் மதத்தின் பெயராலும் கடவுளின் பெயராலும் நடைபெறும் அட்டூழியங்களைக் கண்டித்துச் சீர்திருத்தக் குரல்கள் எழுந்துள்ளன. இது மிகவும் வரவேற்கக் கூடிய ஒரு சூழ்நிலையே யெனினும், நல்ல தன்மைகளை யெல்லாம் ஓர் உருவாக உடையததான் கடவுளென்றும், அக்கடவுளை யடையப் பல் வேறு வழிகளைக் கூறுவனவே பல் வகை மதங்கள் என்றும் இருக்கிற போது அக்கடவுளும் மதங்களும் தேவையே யில்லை யென்று கூறும் அக் குரல்கள் பகுத்தறிவின் பேரால் விளைக்கும் குழப்பங்களை என்னென்று சொல்வது! காலத்துக்குக் காலம் பழக்க வழக்கங்களும் சூழல்களும் மாறுகின்ற போது, எந்தத் துறையிலும் மாசுகள் படிவதும் ஊழல்கள் நிறைவதும் இயற்கையே ஆதலின் அவ்வக் காலத்தாரும் தம் அடைவுகளை அடிப்படையாகக் கொண்டு மாசுகளையும் ஊழல்களையும் போக்கித் தமது பழக்க வழக்கங்களை எல்லாத் துறையிலும் நன்முறையில் காலத்திற்கு எற்றபடி சிறிது சிறிதாக மாற்றிக் கொள்ள முயல வேண்டுமே அன்றி, பயன்களை ஓராமல் புதியவற்றை விரும்பிப் போற்றவும், பழையவற்றைக் காலறுத்துக் கழிக்கவும், ஆழ்ந்தாராயாமல் விரைந்து முற்படக் கூடாது. முற்பட்டால் பல புதிய குழப்பங்களும் எதிர்பாரா இன்னல்களுமே நேர்ந்து விடும். எதையும் ஆழ்ந்து சிந்தித்து அமைதியாகச் செய்தலே சிறந்தது.

நிற்க, நம் நாடு மிகப் பழைய காலந் தொட்டுக் கடவுள் நெறியில் மிகவும் அழுந்திய பற்றும் நம்பிக்கையும் உலகத்துக்கே வழி காட்டிய பெருமையும் உடையதாக இருக்கிறது. ஆகவே இங்கே அந்நெறி பற்றி நடைபெற வேண்டிய சீர்திருத்தங்களும் புரட்சிகளும் விரைந்து நடைபெறுது. அவற்றை விரைவு படுத்தினால் மக்களுக்குள் பல் வேறு வேற்றுமைகளும் பிணக்குகளும் பெருகிக் கொண்டுதான் இருக்கும்.

ஆகவே, சீர்திருத்தக் காரர்கள் மக்கள் ஒற்றுமையைச் சிதைக்கும் வகையில், தமது சீர் திருத்தங்களை மதத்தையும் கடவுளையும் தாக்கிச் செய்தால் விளையும் பயன் மிகக் குறைவாகவே இருக்கும். கடவுள் இருக்கிறது என்பதாலோ இல்லை யென்று சொல்லி விடுவதாலோ எதும் பயன் விளைந்துவிடப் போவதில்லை.

கடவுளின் பெயராலும் மதங்களின் பெயராலுமே சீர் திருத்தங்களைச் செய்த பெரியோர் பலர் இந் நாட்டில் இருந்திருக்கின்றனர்.

நால்வர் பெருமக்களும், இராமாநுசர், சங்கரர், திருமூலர், சேக்கிழார், சந்தானுசிரியர், இராமலிங்கர், மறைமலை அடிகள், திரு. வி. க. போன்றவர்கள் எல்லாம் அத்தகைய சீர் திருத்தக் காரர்களே ஆவர். இவர்களெல்லாம் அவரவர் கால நிலைக்கும் சூழலுக்கும் ஏற்பச் செய்யக் கூடிய சீர் திருத்தங்களைச் செய்து முடித்திருக்கிறார்கள். ஆகவே இவர்களைப் பின்பற்றி வேண்டும் சீர் திருத்தங்களை யெல்லாம் அன்பு முறையில் நாத்திகப் பட்டத்தையும் நம்மவரிடமே எதிர்ப்பையும் பெறுமல் ஏன் செய்து கொள்ளக் கூடாது?

இனி இக்காலத்து வேண்டும் சீர் திருத்தங்கள்தாம் யாவை என்று பார்ப்போம். கலப்பு மணம், சீர் திருத்த மணம் முதலியவற்றை உள்ளடக்கிய சாதி வேற்றுமை ஒழிப்பு, தாய் மொழிக்கு முதன்மை, சமய நிலையங்களில் வீண் செலவு ஒழிப்பு, அவற்றின்வழி மக்களுக்குக் கல்வியும், மருத்துவமும் அளித்து அறிவும் அன்பும் வளர்த்தல், காலத்திற்கேற்ப வாழ்க்கைச் சடங்குகளையும் வழிபாட்டு முறைகளையும் மாற்றிக் கொள்ளல், மூட நம்பிக்கைகளை ஒழித்தல் முதலிய இவைகளை யன்றி வேறு சீர் திருத்தங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும், அவை யெல்லாவற்றையும் தமிழின் பெயராலும் தமிழ்ச் சமயத்தின் பெயராலும் எளிதாகச் செய்யலாம்; எவரும் மறுக்க முடியாதபடி செய்யலாம். காலமும் அதற்கு மிகவும் துணையாகவே இருக்கின்றது என்று மெய்ப்பித்திருக்கிறார் ஆசிரியர் மறைமலை அடிகள். மேலே கூறிய நம் நாட்டு முன்னோர்களில் ஒவ் வொருவரும் ஒவ் வொரு வகைச் சீர் திருத்தத்துக்கும் கடவுளின் பெயராலும் மதத்தின் பெயராலுமே வழி காட்டியும் சென்றிருக்கிறார்கள். ஆகவே சீர் திருத்தக்காரர்கள் கல்வி அறிவினால் மிகத் தாழ்ந்தும் மூட நம்பிக்கையில் மூழ்கியும் இருக்கிற நம் நாட்டில் தாம் விரும்பும் சீர் திருத்தங்கள் எவையாயினும் அவற்றை அன்புக்கும் அறிவுக்கும் மாறுபடாத முறைகளிலும் கடவுள் நெறியிலுமே நின்று செய்ய முற்படுவார்களாயின் எளிதாகப் பெருவாரியில் வெற்றி பெற முடியும் என்றும் அதை விட்டு வீணான குழப்பங்களை உண்டாக்குகிற முறையில் தாக்குதல் போக்குகளும் பிறவும் கொண்டு செயலாற்றுவதால் உண்டாகும் சீர் திருத்தங்கள் குறைவாக நிகழ்வதோடு குழப்பங்களையும் பழியையும் சேர்ப்பனவாக இருக்கும் என்றும் அறிவார்களாக.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

இறைவன் இரக்கின்றான்

(ப. வரதராசன்)

அன்பர்கள் ஈட்டம்! பாடல் பெற்ற தலம்! பெரிய விழா! ஆரவாரமாக நடக்கின்றது. காலை ஏழு மணிக்கு விறுவிறுப்பாக ஆரம்பமான விழா பிற்பகல் ஒரு மணிக்கு முடிவுற்றது.

சத்திரத்தின் வாயிலில் அன்பர்கள் உணவுகொள்ள விறுவிறுப்பாகக் குழுமினர். அத்தனை பேரும் ஒரே நேரத்தில் உள்ளே புக விரும்பியதால் நெருக்கடி.

அதே வாயிலில் மற்றொரு புறம், விழாவில் கலந்து கொள்ளாத உள்ளூர் மக்களின் ஒரு கூட்டம், ஒவ்வொரு முறையும் உள்ளே புக முயன்றது; பாபம், வெற்றி காணாது ஒவ்வொரு தடவையும் பின் வாங்கியது.

இச் சிறு கூட்டத்தைச் சற்று உற்று நோக்குங்கள். இவர்கள் உள்ளூரைச் சேர்ந்தவராகவே இருக்க வேண்டும். வறுமையைப் பிறப்புரிமையாகக் கொண்ட தோற்றம். ஆண்களும், பெண்களும், சிறுவர்களுமாகச் சேர்ந்து ஏறக்குறைய ஐம்பது பேர் இருக்கலாம். ஆடை என்ற பேரால் ஒன்று அவர்கள் உடலின் ஒரு பாகத்தே ஒட்டிக் கிடக்கின்றது. நமக்கு மிகவும் பழக்கமான இக்கோலத்தை விவரிக்க முற்படுவது வீண்.

கூக்குரல்கள் பற்பல தொனியில் எழுகின்றன. எத்தனை முறைதான் முன்னேற முயன்று பின் வாங்குவது. ஒவ்வொரு முறையும் முகத்தில் அந்த ஏமாற்றமும் ஏக்கமும் சூழ்கின்றன. அடுத்தடுத்து ஏதோதோ முணுமுணுப்பு. இவ்வளவும் அந்த ஒரு பகல் வயிற்றை நிரப்பத்தான்!

அந்தோ! நாய்களைப்போல் விரட்டி அடிக்கப் பெற்றும், தன் உணர்வு சிறிதுமின்றிச் சோற்றையே நோக்கமாகக் கொண்ட இவ்வினத்தை இறைவன் ஏன் படைத்தான்! கொடிது! கொடிது; அவ்வளவு பேருடைய உணர்ச்சிகளும் வயிற்றின் பாட்டால் இப்படியா மழுங்கி இருக்க வேண்டும்! என்னே இப்பசியின் ஆற்றல்!

உற்று நோக்கிச் சிந்திக்கச் சிந்திக்க 'விபரீத' எண்ணங்கள் எழுகின்றன. இந்த இரங்கிய முகங்களில் ஏங்கிய முகங்களில் என்ன காண்கின்றோம். இறைவனே இப்படி இரங்கி ஏங்கி யாசிப்பது போல் உள்ளத்தே தைக்கின்றது. நெஞ்சம் தாக்குறுகின்றது.

ஆம் இறைவன் ஏங்குகின்றான்’ இரங்குகின்றான்; யாசிக்கின்றான்.

ஆனால் நாம் கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய் ஆகின்றோம்; இறைவனைக் காணாது, கேட்காது, வெறுங் கோயிலில் புகுந்து ஆரவாரிக்கின்றோம்.

இயற்கையாகச் சூரிய ஒளி இருந்தும், கண்ணின் ஒளி இருந்தும் கண்ணுக் கணிகலனணிந்து பார்ப்பதல்லவோ நம் நாகரீகம்.’’

ஒரு வாசகத்தை நாம் செவிமடுக்கின்றோம்—சைவப் பாதிரியார் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் வாயிலாக:—

> ‘‘மாளிகை தீப்பிடித்த காலை அதன் கண்ணுள்ள சித்திரத்தின் பால் இரசனை எழாதவாறு போல நம் சமுதாயத்திற்கு இது காலை நேர்ந்துள்ள பேராபத்தை நீக்கத் தீவிரப்படுவதை யொழித்துப் பண்டைப் பெருமைகளையும் சிறப்புகளையும் பேசி வாளா விருப்பது தகாது.’’

மிகவும் சிந்திக்க வேண்டிய வாசகம்! நம் மாளிகை மிகப் பெரியது! பழமையானது! கலை அழகுகள் நிரம்பப் பெற்றது! ஒப்பு உயர்வு அற்றது! அதன் சிறப்புகளை ஆராயப்புகின் நம் வாழ் நாள் போதாது! அதைத் தீப்பற்றியுள்ளது.

இந்தத் தமிழ்ச் சமுதாயந்தான் இங்குக் குறிப்பிடப் படுகின்றது. இந்தத் தீயை அணைத்துப் பழுது பட்ட பாகத்தைச் சீர் திருத்தி ஒழுங்கு படுத்துவதுதான் கடமை. தீயை அணைப்பதற்குக் கடமை உணர்ச்சியும், சீர் திருத்தி ஒழுங்கு படுத்த அறிவு கலந்த பண்பும் தேவை.

எத்தகைய சீர் கேட்டிற்கும் மூல காரணத்தை ஆராயின் அந்தப்பழைய அறியாமையேதான் காரணமாயிருத்தலை ஒருவாறு தெரியலாம். இவ்வறியாமைதான் எத்தனை விதமாக வேடம் பூண்டுள்ளது!

அது கல்லாதவரிடம் ஒரு விதமாகவும், கற்றவரிடம் வேறொரு விதமாகவும் தோன்றுகின்றது. எளிய கிராம மக்களிடம் ஒரு விதமாகவும், நகரத்து 'நாகரிக' மாந்தரிடம் மற்றொரு விதமாகத் தோன்றுவதும் அஃதே. அஃதே அரசியலறிஞர்களையும், ஏனைய அறிஞர்களையும் வேறு வேறு கோலத்தில் பீடித்துள்ளது. அதுவே ‘பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள்’ எனப்படுவதும்.

இதற்காக யார் மீதும் குறைப்படுவதும் அறியாமை. மனித அறிவு விசித்திரமானது! வெவ்வேறு கோணங்களினின்றும் காணப்படும் காட்சிகள் அந்தந்தத் தகுதிக்குச் சரியாகப் படுவது வியப்பில்லை அல்லவா!

ஆயின், நாம் செய்யக் கடவதி யாது? பல துறையாகக் கிடக்கும் அறிவைக் கட்டுப்படுத்த எண்ணுவது அறியாமை. ஆனால் அவ்வறிவுடன், கடமை உணர்வும், பண்பும், கலக்க வேண்டும். அறிவுடன் இவைகள் கலந்து மிளிர்ந்தால் ஆன்ம உணர்வு பெருகும். ஆன்ம உணர்வு பெருகினால்?......!

இவற்றிற்கு வெறும் பேச்சும் எழுத்தும் பயன்தரா. செயல்! உள்ளமும், உணர்வும் உடலும் ஒன்றுபட்ட செயல்! வேண்டும். இதைத்

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

தான் தொண்டு என்ற பெயரால் அடிக்கடி கேட்கின்றோம்.

திருவள்ளுவரைக் களங்கமற்று அணுகவேண்டும். அவர் நம்மை ஒரு வெறும் 'வாய் வீரராக' ஆக்காது உண்மைத் தொண்டராகவே மாற்றுவார்.

அவரும் "விருந்தோம்பல்" என்ற பெயரால் பத்துக் குறள்கள் அமைத்துள்ளார். ஆனால் நாம் அவற்றைக் கற்க முற்படும்போது, "விருந்து" என்றபதம், யாரை, எந்த நிலையிலிருப்பவரைக் குறிக்கின்றது; அதற்குப் பரிமேலழகர் இவ்வாறும். மணக்குடவர் அவ்வாறும் பொருள் கண்டுள்ளார்கள் என்பன போன்றவைகளைக்கற்று இன்பமடைந்து, பின் கிளிப்பிள்ளை வழக்காக அப்படியே மேடைகளிலும், அச்சிலும் பொழிகின்றோம்.

உண்மையில், வள்ளுவரின் 'விருந்தோம்பல்' தற்போது வழக்கற்றுவிட்டது, கைக்கொள்ள முடியாதது; காலங் கடந்தது என்று துணிவுடன் கூற முற்படுகின்றது உள்ளம்.

நாம் உன்னவேண்டும். வள்ளுவரின் உள்ளம் என்ன என்பதை உன்னவேண்டும்.

வள்ளுவர் 'விருந்தோம்பலை', அவ்வாறு நம்பும் ஒருவன் தன் ஆன்ம உணர்வைப் பெருக்கிக் கொள்ளவும் ஓம்பப்படுவோரின் உணர்வைக் கிளரவுமே அமைத்தார் என்பதைச் சிந்திக்கத் தெளியலாம். அதற்குத் தக்க சூழ்நிலையாகவே, இல்லின் இயல்புரைத்து, இல்லாளின் நலம் தந்து, நன் மக்கள், அன்பு, இன்சொல், ஆகிய உடைமைகளை முன்னும் பின்னுமாக அமைத்துள்ளார். இந்த அமைப்புக்களால் ஓம்புவோரன்றி ஓம்பப்பட்டோரும் உய்ய வாய்ப்புள்ளதை உய்துணர வேண்டும். இன்று, இந்த அறத்தைக் கைவிட்ட நாம், அல்லது எதனாலும் கைக்கொள்ளக் கூடாத நிலையிலுள்ள நாம் இதனால் பெறப்படும் பெரும்பயனை இழந்தேயுள்ளோம்.

இங்கும் அறிஞர்களின் கடமையொன்றுள்ளது. "விருந்தோம்பலின்" இலக்கணத்தைப் பரிமேலழகர் சுவடு பற்றிப் பன்னிப் பன்னிப் பேசுவதில் பயனில்லை. ஆயினும் வள்ளுவரின் உள்ளப்படியே அதன் பயனை இழக்காது பயனுற இவ் வேள்வியை வேறு விதத்தில் ஆற்ற வாய்ப்புண்டு.

இதற்குத்தான் போலும், இறைவனே ஏங்கி யாசிக்கின்றான். முன்பு குறித்த "காட்சி"யை நினைவிலிருத்திக் கொள்ளுவோம். அன்பர்களும், அறிஞர்களுமாக ஒருங்கு கூடுவோம். நம் அறிவையும், அன்பையும், முழுக்க முழுக்க வஞ்சனையில்லாது பயன்கொண்டு இம் மக்களது நிரந்தரப் பசியை நிரந்தரமாகப் போக்கி அவர்கள் உள்ளத்தைத் தொட்டு உணர்வை விழித்தெழச் செய்ய முற்படுவோம், அதுவும் விழாத்தான்; அங்கே ஒளிரும் இறைவனைத் தரிசிப்போம்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

நீரில் விளை பொருள்களும் அந்நிலத்திற்குச் சிறப்பாக உள்ளன. அவற்றில் மீன்கள் பரதவரின் உணவுப் பொருளாகும். நிலத்தை உழவர் உழுது பயிரிட்டு உணவுப் பொருள்களைப் பெறுவது போல் கடலில் நெய்தல் நில மக்கள் வலை வீசி மீன்களைப் பிடிப்பார்கள். இக்கருத்தைச் சேக்கிழார் தாமியற்றிய பெரிய புராணம், அதிபத்த நாயனார் புராணத்தில்,

"மன்னு தொன்மையின் வலை
வளத் துணவினில் மலிந்த
தன்மை வாழ்குடி மிடைந்தது
தடநுளைப் பாடி."

என்று பாடி விளக்கினார்,

தாம் வலை வீசிப் பிடித்த கொழுமீன்களைக் கடற்றுறையில் பரதவர் சுடுவார்கள். அச் சுடுபுகை அவரூர்த் தெருக்களை மூடிக்கொள்ளும். 'துறை' என்னும் தமிழ்ப்பதம் தகுதி வாய்ந்த இடம் என்னும் பொருளைத் தருகின்றது. கடற்கரையில், தந் தொழிலை நிறைவேற்றற்குத் தகுந்த இடம் பரதவருக்குத் துறையாயிற்று. அத்துறையின்கண் ஞாழல் மரங்கள் மிகுதியாய் உள்ளமையால் ஞாழற்றுறை என்றும் ஞாழல் மலர்களின் சிறுமை நோக்கி சிறுவீ ஞாழலென்றும் ஆசிரியர் கூறினார்.

நில வருவாயின் சிறப்பைக் கூறி 'அழியா மரபின் நம் மூதூர் நன்றே' என்ற தோழி, கடல் வருவாயின் சிறப்பைக் கூறி, 'சிறுவீ ஞாழல் துறையுமா ரினதே' என்றாள். இனிய துறையையுடைய நல்ல ஊரின் புறத்துள்ள கானலில், புன்னை மலரில் தேனுண்டு, வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன.

"சேறுடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்தவண்டு
வேறாய உருவாகிச் செவ்வழி
நற் பண்பாடும் மிழலையாமே."

என்னும் திருஞான சம்பந்தர் தேவாரம் ஈண்டு ஒப்பு நோக்கற் குரியது. வண்டுகள் அவ்வாறு வரவேற்குந் தலைமகன் அங்கு வாராமையொன்றே அக்கானலுக்குப் பழியாயிற்றென்கிறாள் தோழி.

தலைமகன்றன் களவொழுக்கத்தை வெறுக்கும் ஊரார்க்கு அவன் அக்கானலில் வருவது பழியாயிற்று. தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட தலைமகன், ஊரார் பழிச்சொல்விற் கஞ்சி, அங்கு வாராமை தலைமகளுக்குப் பழியாய்த் தோன்றிற்று. காதலர் கூட்டத்திற்கு இடந்தந்த கானல் ஊரார் பழிச் சொல்விற்கும் இடம் தந்தமையால், ஊரார்க்குப் பழியான தலைமகன் வருகையையும், தலைமகளுக்குப் பழியாகிய அவன் வாராமையையும், கானலின் மீதேற்றி 'ஒன்றே தோழிநங் கானலது பழியே' என்றமை ஆசிரியரின் கருத்தாழத்தை எடுத்துக் காட்டுகின்றது. தலைமகன்றன் தேரொலி அவன் வருகையை அறிவிக்கின்றமையால், தலைமகளுக்கு இன்னொலி யாயிற்று. அவ் வின்னொலி கேட்டலின் அருமை அவன் வாராமையைக் குறித்தது.

ஐவகை நிலங்களின் சிறப்பைக் காதலர் களவொழுக்கத்தில் அமைத்துக் காட்டுந் திறம் சங்கப் புலவர்களின் தனிச்சிறப்பாகும். 'முல்லைக் கொடி'யின் சென்ற வார இதழில் மருத நிலச்சிறப்பையும், இவ் விதழில் நெய்தல் நிலச் சிறப்பையும் ஒருவாறு கூறினோம். ஏனைய நிலங்களின் சிறப்பையும் இனி வரும் இதழ்களில் எடுத்துக் காட்ட முயல்வோம்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)